செ.வெ.எண்:09 நாள்:07.03.2017

# அரியலூரில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு தலைமை கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வறட்சி நிவாரண நிதியினை வழங்கினார்.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான கூட்டரங்கில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதிக்கான காசோலையினை அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்களும் இன்று (07.03.2017) வழங்கினார்கள்.

**இதுகுறித்து அரசு தலைமை கொறடா அவர்கள் தெரிவித்ததாவது :-**

2016-ம் அண்டு வடகிழக்கு பருவ மழை மூலம் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய மழையின் அளவு மிகக் குறைவாகவே கிடைத்துள்ளது. இதனால், தமிழகம் முழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கடும் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலிருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் விவரம் சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 33 சதவீதத்திற்கு மேல் 50,35,127 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டு. 32,30,191 விவசாயிகளுக்கு நெற்பயிர் மற்றும் இதர பாசன பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு **ரூ.5,465/-ம்**, மானவாரி பயிர்களுக்கு **ரூ.3000/-ம்** நீண்ட கால பயிர்களுக்கு **ரூ.7287/-ம்** மற்றும் பட்டுப்புழு வளர்ப்புக்கு **ரூ.3000/-ம்** என்ற அடிப்படையில் இடுபொருள் நிவாரண உதவித்தொகையாக **ரூ.2247 கோடி** வழங்க 21.02.2017 அன்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் உத்தரவிட்டதன்படி அனைத்து மாவட்டங்களிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது என அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வறட்சி நிவாரணத் தொகையை பயனாளிக்கு வழங்கி தெரிவித்தார்.

**இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில், அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, தமிழக அரசுக்கு அறிக்கைகள் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் இம்மாவட்டத்தில் 26591.12.5 ஹெக்டேர் பரப்பளவில் வேளாண்மை பயிர்கள் பயிரிட்ட 52,500 விவசாயிகளுக்கு **ரூ.21 கோடியே 65 இலட்சத்து 65 ஆயிரத்து** 300 மதிப்பிலும், 1.65.5 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிட்ட 7 விவசாயிகளுக்கு **ரூ.15 ஆயிரத்து 300 மதிப்பிலும்,** 6.60.0 ஹெக்டேர் பரப்பளவில் பட்டு வளர்ப்பு பயிர்கள் பயிரிட்ட 10 விவசாயிகளுக்கு **ரூ.48 ஆயிரத்து** 900 மதிப்பிலும் என ஆகமொத்தம் **26599.38.0** ஹெக்டேர் பரப்பளவில் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் பட்டு வளர்ப்பு பயிர்களில் பயிரிட்ட 52,517 விவசாயிகளுக்கு **ரூ.21 கோடியே 66 இலட்சத்து 29 ஆயிரத்து 500** மதிப்பில் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நேரடியாக வறட்சி நிவாரணத் தொகை வழங்கப்படவுள்ளது. இதில் முதல் கட்டமாக இன்று (07.03.2017) 10 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.சந்திரகாசி, ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் திரு.J.K.N.இராமஜெயலிங்கம், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திட்டம் திருமதி.லோகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.